**கெஸ்பாவ நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெஸ்பாவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கெஸ்பாவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 405,131 வேறுபாடு காணப்பட்டது. | 2022 இன் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்கு மீதிகள் சரிசெய்யப்படல் வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலப் பகுப்பாய்வு மற்றும் ஏனைய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 281,047 ஆன களியாட்ட வரி மீதி கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | இதனை அறவிடுவதற்கான முறைமையொன்று காணப்படாமையினால் பதிவேடுகளில் ஆவணங்களை சீராக்குவதற்காக மிகுதி அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்களை பரீட்சித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 177(1) | சேகரிக்கப்படுகின்ற ஆதன வரி பணம் நிறுத்தி வைக்கப்பட்டு தாமதத்துடன் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பான தாமதம் தொடர்பிலான காரணங்களை விசாரித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அவர்கள் அது தொடர்பான விடயங்களை சமர்ப்பித்துள்ளனர். மேலும், இந்த காலதாமதம் தொடர்பாக நிலுவை வருமானத்தை சேகரிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அலுவலக கட்டளையும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2023.02.22 ஆம் திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2015 யூலை 14 ஆம் திகதிய இலக்கம் 03/2015 என்ற அரச நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 371(5) | உபகட்டு நிதி வழங்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தரால் உரிய பணிகள் பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட முற்பணம் கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | 10 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக தாமதங்களுடன் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த பட்டியல்களை தீர்ப்பதிலான தாமதத்தை சரிசெய்வதற்கு உரிய உள்ளக சுற்றறிக்கை விநியோகிப்பதற்கும், எதிர்காலத்தில் இந்த தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 175,382,222 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,134,973 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | **84,000,000** | **84,000,000** | **50,162,444** | **33,834,556** | **84,500,100** | **83,427,809** | **79,314,222** | **70,414,711** |
| (ii) | வாடகை | **15,500,000** | **12,656,200** | **13,699,622** | **1,239,839** | **21,076,000** | **12,763,479** | **13,770,532** | **2,937,390** |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **1,500,000** | **1,488,000** | **1,488,000** | **-** | **1,500,000** | **1,536,600** | **1,528,600** | **-** |
| (iv) | ஏனைய வருமானம் | **290,000,000** | **315,000,000** | **315,000,000** | **-** | **225,000** | **191,250** | **191,250** | **-** |
| | மொத்தம் | **391,000,000** | **413,144,200** | **380,350,066** | **35,074,395** | **107,301,100** | **97,919,138** | **94,804,604** | **73,352,101** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **வீதவரியும் வரியும்**<br>நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதன வரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 68,572,810 ஆக இருந்ததுடன், ரூபா 50,000 இனை விஞ்சிய 47 | 2023.01.01 ஆம் திகதியில் மொத்த நிலுவை ஆதன வரி மீதியில் ரூபா 50,000 இணை விஞ்சிய 53 ஆதன வரி அலகுகளில் தொகை ரூபா 5,759,896.18 ஆக இருந்ததுடன், தற்போது அதில் 96 ஆதனங்களுக்குரிய ரூபா 607,672.56 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதன வரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 5,152,197 ஆகும். | | |
| (ஆ) | **கழிவுப் பொருள் வரி** | | |
| | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த கழிவுப் பொருள் வரி பெறுமதி ரூபா 3,724,445 ஆக இருந்ததுடன், கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக எந்தவொரு தொகையும் செலுத்தாத 10 நிறுவனங்களில் இருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 1,185,955 ஆகும். | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த கழிவுப் பொருள் வரி பெறுமதியில் தற்போது ரூபா 1,528,705.50 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் ரூபா 3,724,445.50 அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை கழிவுப் பொருள் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **வாடகை** | | |
| (i) | சபைக்குச் சொந்தமான நீண்ட காலம் வாடகைக்கு வழங்கப்பட்ட 133 ஆதனங்களில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 1,764,055 தொகையில் நிலுவை 10 தவணைகளுக்கு மேற்பட்ட 16 ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 112,500 ஆகும். | ரூபா 314,900 பெறுமதியில் 2023.03.31 வரை ரூபா 202,400 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மிகுதி பணத்தையும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை ஆதன வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான 20 மீன் கடைகளில் 07 கடைகள் வாடகைக்கு வழங்காமல் மூடிவைக்கப்பட்டிருந்தது. | மூடப்பட்டுள்ள 07 மீன் கடைகளுக்காக கேள்வி கோரப்பட்ட போதும், எந்தவொரு விண்ணப்பதாரரும் முன்வராமையினால் வேறு வருமானங்களை உழைக்கும் சந்தர்ப்பங்களில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | **களியாட்ட வரி** | | |
| | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 281,047 களியாட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த களியாட்ட வரி தொகையை பதிவளிப்பதற்காக 2018.11.08 ஆம் திகதி பொதுச் சபை தீர்மான இலக்கம் (144) 6.4 அங்கீகாரம் பெறப்பட்ட போதும் களியாட்ட வரி நிலுவை பெறுமதியை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கைவிடுவதற்காக இதுவரை பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்படாமையினால் நிலுவை மீதியாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்றது. | |
| (உ) **தொலைத்தொடர்பு கோபுரம்**<br>சபை அதிகார பிரதேசத்தில் 56 தொலைத் தொடர்பு கோபுரங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 08 கோபுரங்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மதிப்பீடு செய்து ஆதனவரி இலக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்படாத கோபுரங்களை மதிப்பீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களில் கட்டிட திட்டத்தின் பிரதியொன்றை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கோபுரங்களில் இருந்து இது வரை அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தொலைத் தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்களிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **கழிவுப் பொருள் முகாமைத்துவம்.**<br>மீளாய்வாண்டில் கலப்பு கழிவுகள் 11394 டொன் கரதியான கழிவுப் பொருள் தளத்திற்கு கையளிக்கப்பட்டிந்ததுடன், மொத்த கழிவுப் பொருள் அளவில் வேறு பிரிக்கப்படாத கழிவுப் பொருட்களின் அளவு 69 சதவீதம் ஆகும். | வேறு பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களின் அளவை அதிகரித்துக் கொள்வதற்கு தொடர்ந்தும் மக்களுக்கு அறவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் மீள்சுழற்சி கழிவுப் பொருட்களை வேறு பிரிக்கும் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் கிராம மட்டத்தில் கழிவுப் பொருள் சந்தை நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருட்களை உரிய பிரகாரம் வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **நிலைபேறான அபிவிருத்தி**<br>நிலைபேறான அபிவிருத்திக்காக 2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்காக நிறுவனம் சார் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு பதிலாக பாதீட்டு நிதி ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டு வருடாந்த நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதி ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்ட வருடாந்த நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று எதிர்வரும் ஆண்டின் போது தயாரிக்கப்படும். | நீண்ட கால இலக்கை அடைந்து கொள்வதற்காக வருடாந்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும், நகர சபையால் 2022 ஆம் ஆண்டின் போதும் சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதம் என்பவற்றின் பிரகாரம் கிடைத்த ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு சொந்தமான காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்காக மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சபைக்குச் சொந்தமான ஏனைய நிலையான சொத்துக்களுக்காக மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. | சகல நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 99,962,393 மாகாண சபை கடன்கொடுத்தோர் மீதியில் 2017 முதல் 2020 ஆம் | உரிய கடன்கொடுத்தோர் மற்றும் பிரதேச செயலகத்தில் இருந்து தகவல்களை விசாரனை செய்து | செலுத்த வேண்டிய கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்குரிய ரூபா 3,647,895 மீதியில், 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,239,864 மீதியும் உள்ளடங்கியிருந்த போதும் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உறுதிப்படுத்தியதன் பின்னர் தீர்த்து வைத்து ஆண்டின் இறுதி கணக்குகள் 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், 2023 ஆம் ஆண்டின் கொடுப்பனவு பகுதியாக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 10,887,759.30 ஆகும். | வேண்டும். |
| (இ) | 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரை கேள்வி பிணை வைப்பு ரூபா 769,900 தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது அந்த தொகை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கெஸ்பாவ அதிகாரப் பிரதேசத்தில் 02 வருடம் முதல் 05 வருடம் வரையிலான பாடசாலை மாணவர்களுக்காக பயிற்சி புத்தக தொகுதியொன்று வீதம் 2021 இன் விடுமுறைக்கு முன்னர் வழங்குவதற்காக அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் இருந்து கடன் அடிப்படையில் 2021 திசெம்பர் 29 ஆம் திகதி பெறப்பட்டுள்ளதுடன், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட புத்தக தொகுதிகளுக்கு இடையே ரூபா 111,029 பெறுமதியான 306 புத்தக தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது . | புத்தகங்களை பகிர்ந்தலிப்பதற்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் மீண்டும் கிடைக்காமையினால் அதற்காக ஒதுக்கப்பட்ட 300 புத்தக தொகுதிகள் மற்றும் தவறான சந்தர்ப்பத்தின் போது பகிர்ந்தளிப்பதற்கு வழங்கப்பட்ட மிகுதி புத்தக தொகுதிகள் 06 மேலும் எஞ்சி காணப்பட்டது. வழங்குவதற்கு முடியாத புத்தகங்களை வழங்குவதற்காக வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றமையினால் கடந்த ஆண்டில் எஞ்சிய சகல புத்தகங்களும் எதிர்வரும் ஆண்டின் புத்தகங்களை வழங்குவதற்காக பெறப்பட்டிருந்தது. விஷேடமாக இந்த ஆண்டின் புத்தகங்களின் விலை அதிகமாக உயர்வடைந்து சென்றதுடன், ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் பெறக் கூடியதாக இருந்த | எஞ்சி காணப்படுகின்ற புத்தகங்களை பகிர்ந்தலிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புத்தகங்களின் அளவு குறைந்தமையினால் கடந்த ஆண்டில் எஞ்சியுள்ள 306 புத்தக பொதிகளின் அளவும் இந்த ஆண்டில் புத்தகங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும். | |
| (உ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக பேணிச் செல்கின்ற ரூபா 37,753,674 மீதியொன்று உள்ள சாதாரண சேமிப்பு கணக்கில் ஆண்டின் போது எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நிலைமையின் அடிப்படையில் விலைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றதன் காரணமாக அந்த கணக்கில் இருந்து மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட செயற்திட்டத்தில் மதிப்பீட்டு பெறுமதி உயர்வடைந்தமையினால் நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அந்த கணக்கில் பணத்தை செலவிட வேண்டியிருந்தமையின் காரணமாக இந்த கணக்கில் இருந்து கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த கணக்கில் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 43,659,052 ஆக இருந்த போதிலும், அந்த மீதியில் 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 550,849 கடன் மீதி காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகர சபைக்குரிய நூலகம் மற்றும் ஏனைய அலுவலகங்களின் பொருட் பதிவேட்டுப் புத்தகம் மற்றும் பொருட்பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பதிவேடுகளை நாளதுவரையாக்குதல் வேண்டும். |